

இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று (05.09.2024) ஆணையர் அலுவலகத்தில் இந்து சமய அறநிலையத்துறை மற்றும் தி இந்து குழுமம் இணைந்து தயாரித்துள்ள 'திருவண்ணாமலை காட்சிக் கையேட்டினை வெளியிட்டார். உடன் நீர்வளத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசன், சுற்றுலா. பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலர் டாக்டர் பி.சந்தரமோகன். இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் .பி.என்.ஸ்ரீதர். கூடுதல் ஆணையர்கள் டாக்டர் இரா. சுகுமார். திருமதி சி.ஹரிப்ரியா. இந்து குழும பதிப்பக பிரிவின் துணை பொது மேலாளர்கள் எம்.தியாகராஜன், பி.சுப்பிரமணியன், இணை ஆணையர்கள் உள்ளிட்ட அலுவலர்கள் உள்ளனர்.

## திருப்பத்தூர் நகரக் கழக பொது உறுப்பினர்கள் கூட்டம்!

திருப்பத்தூர், செப். 6 –

திருப்பத்தூர் மாவட்டம், திருப்பத்தூர் நகர தி.மு.க சார்பில் நேற்று காலை 10.00 மணியளவில் திருப்பத்தூர் SRK கன்வென்சன் ஹாலில் நடைபெற்ற பொது உறுப்பினர்கள் ஆலோசனை கூட்டத்தில் திருப்பத்தூர் மாவட்டச் செயலாளரும், ஜோலார்பேட்டை சட்ட மன்ற உறுப்பினருமான க.தேவராஜி எம்.எல்.ஏ. சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு சிறப்புரை நிகழ்த்தி, புதிய உறுப்பினர்கள் அட்டை மற்றும் தமிழினத் தலைவர் கலைஞர் நூற்றாண்டு நிறைவு மலர், தென்திசையின் தீர்ப்பு 40/40 நூல்களை வழங்கினார்.

திருப்பத்தூர் நகர செயலாளர் எஸ்.ராஜேந்திரன் நிகழ்ச்சி ஏற்பாடுகளை செய்து, கூட்டத்திற்கு தலைமை வகித்தார்.

இந்நிகழ்ச்சியில் திருப்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் அ.நல்லதம்பி, டி.கே.மோகன், ஆ.சம்பத்குமார், கே.பி.ஆர்.ஜோதிராஜன், சு.அரசு, டி.ரகுநாத், வீ.வடிவேல் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம், மதுராந்தகம் வடக்கு ஒன்றிய திமுக சார்பில் பொது உறுப்பினர்கள் கூட்டம் நெல்வாய் கிராமத்தில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்றது. இதில்காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு கழகப் பணிகள் குறித்து ஆலோசனை வழங்கி சிறப்புரையாற்றினார். உடன் காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க. செல்வம், ஒன்றிய செயலாளர் பி.எச். சத்யசாய், ஒன்றிய நிர்வாகிகள் ஆறுமுகம், தனசேகரன், தமிழரசன், திருஞான செல்வம், தேவராஜ், மணியன், சுந்தரவரதன் உள்ளிட்ட கிளைக் கழக செயலாளர்கள் கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

223 வது நினைவு தினத்தை முன்னிட்டு விருப்பாட்சியில்

# விடுதலைப் போராட்ட வீரர் கோபால் நாயக்கர் சிலைக்கு மாலை அணிவிப்பு!

## அமைச்சர் அர.சக்கரபாணி மரியாதை செலுத்தினார்!

திண்டுக்கல், செப். 6 -

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் வட்டம், விருப்பாட்சியில் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள விடுதலைப் போராட்ட வீரர் கோபால் நாயக்கர் மணிமண்டபத்தில், அவர்களின் 223 ஆவது நினைவு தினத்தை முன்னிட்டு, அன்னாரது திருவுருவச்சிலைக்கு அமைச்சர் சக்கரபாணி, மாவட்ட ஆட்சித்தலைவர் பூங்கொடி தலைமையில் நேற்று (05.09.2024) மாலை அணிவித்து, மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

இந்நிகழ்ச்சியில் அமைச்சர் சக்கரபாணி தெரிவித்ததாவது:

இந்திய திருநாட்டின் விடுதலைக்காக அரும்பாடுபட்டு தன்னை அர்ப்பணித்துக் கொண்ட தலைவர்கள் மற்றும் சுதந்திரப் போராட்ட வீரர்கள் ஆகியோரின் தியாகங்களைப் போற்றிப் பாராட்டி, பெருமை படுத்துகின்ற வகையில், அரசின் சார்பில் அந்த தியாக சீலர்களுக்கு நகரின் முக்கிய பகுதிகளில் சிலைகளும், அவர்களின் நினைவினைப் போற்றுகின்ற வகையில் பிறந்த இடம், வாழ்ந்து மறைந்த வீடுகளை நினைவு இல்லங்களாகவும், நினைவு மண்டபங்களும், நினைவுத் தூண்களும் அரசின் சார்பில் அமைக்கப்பட்டு உரிய முறையில் பராமரிக்கப்பட்டு வருகின்றன. மேலும், அப்பெருமக்களின் பிறந்த நாள் மற்றும் நினைவு நாட்களானது, அரசு விழாவாக தமிழகம் முழுவதும் கொண்டாடப்பட்டு வருகின்றன.

தமிழ்ச் சான்றோர்கள், விடுதலைப் போராட்டத் தியாகிகள் மற்றும் தலைவர்கள் ஆகியோரைப் பெருமைப்படுத்தும் வகையில், அன்னார்களது பிறந்த நாளன்று தமிழ்நாடு அரசின் சார்பில் ஆண்டு தோறும் மாலை அணிவித்து, மரியாதை செலுத்தி, விழாக் கொண்டாடப்பட்டு வருகிறது.

விடுதலைப் போராட்டத் தியாகிகள், தமிழ்ச் சான்றோர்கள் மற்றும் தலைவர்கள் ஆகியோரின் வாழ்க்கை வரலாறு, போராட்டத்தில் பங்கேற்ற நிகழ்வுகளை நினைவுகூரும் வகையிலும், வருங்கால இளையதலைமுறையினர் அதை அறிந்து கொள்ளும் வகையிலும், நினைவு மண்டபங்களில் படங்கள், வரலாற்று தகவல்கள் பொதுமக்கள் பார்வையிடும் வகையில் அமைக்கப்பட்டு வருகின்றன.

முதலமைச்சர் அவர்கள், நாட்டின் விடுதலைக்காக அரும்பாடுபட்ட தலைவர்கள் மற்றும் வீரர்களின் திருவுருவச் சிலைகளுக்கு சுதந்திரதினம், குடியரசு தினம், தலைவர்களின் பிறந்த தினம் மற்றும் நினைவு தினங்களில் தலைவர்களின் திருவுருவச் சிலைகள் மற்றும் படங்களுக்கு மாலை அணிவித்து, மலர் தூவி மரியாதை செலுத்திட ஆணையிட்டுள்ளார்கள். அதன்படி, விடுதலைக்காக அரும்பாடுபட்ட தலைவர்கள் மற்றும் வீரர்களின் திருவுருவச் சிலைகள், படங்களுக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டு வருகிறது.

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம், விருப்பாட்சியை 40 ஆண்டுகள் ஆட்சி செய்து வெள்ளை ஏகாதிபத்தியத்தால் தூக்கிலிடப்பட்ட, தமிழ்நாட்டின் மிகப் பெரிய விடுதலைப் போராட்ட வீரர் குப்பளப் பாட்சா என்று திப்பு சுல்தானாலும், கோபால் நாயக்கர் என்று மக்களாலும் அன்புடன் அழைக்கப்பட்டவர் திருமலை குப்பளசி ன்னப்ப நாயக்கர். விருப்பாட்சியைச் சுற்றிலும் தன்னுடைய உறவினர்களைக் கொண்டு பல ஊர்களை உருவாக்கி ஆண்டு வந்தார்.

சிவகங்கை ராணி வேலுநாச்சியார், பாஞ்சாலங்குறிச்சி ஊமைத்துரை ஆகியோருடன் இணைந்து வெள்ளையருக்கு வரி கட்டாமல் போராடினார். வெள்ளையர் ஆதிக்கத்தை எதிர்த்து திண்டுக்கல் பகுதியில் போரிட்டவர் விருப்பாட்சி கோபால் நாயக்கர். இவர் சிவகங்கை ராணி வேலுநாச்சியார், பாஞ்சாலங்குறிச்சி ஊமைத்துரை ஆகியோருக்குத் தேவையான பாதுகாப்பையும், படை பலத்தையும் வழங்கியவர்.

திண்டுக்கல் சீமை பாளையக்காரர்களை ஒன்றிணைத்து வலுவான கூட்டணியை கோபால்நாயக்கர் உருவாக்கி, புலித் தேவன், தீரன்சின்னமலை, வீரன் அழகுமுத்துக்கோன், வீர பாண்டிய கட்டப்பொம்மன் போன்ற பாளையக்காரர்களுடன் இணைந்து ஆங்கிலேயருக்கு வரி கட்ட மறுத்து போர் புரிந்தார்.

வீரபாண்டிய கட்டபொம்மன் தூக்கி லிடப்பட்ட பின்னர், பாஞ்சாலங்குறிச்சி சிறைக்குள்ளே பூட்டி வைக்கப்பட்டிருந்த அவருடைய தம்பி ஊமைத்துரையை, சிறைக்குள்ளே புகுந்து அதிரடிப்போர் நடத்தி, ஊமைத்துரையை மீட்டு, விருப்பாட்சிக்கு அழைத்து வந்து, 6000 படை வீரர்களை அவருக்கு அளித்து ஊமைத்துரையை பாஞ்சாலங்குறிச்சிக்கே மன்னராக்கியவர் கோபால்நாயக்கர்.

கும்பினிப்படையினரை எதிர்த்து நடைபெற்ற கொரில்லா தாக்குதலுக்கு கோபால்நாயக்கர்தான் காரணம் என்று கருதி அவரை 04.05.1801 அன்று வெள்ளையர்கள் கைது செய்து திண்டுக்கல் சிறையில் அடைத்து சித்ரவதை செய்தனர். பின்னர் திண்டுக்கல் கோபாலசமுத்திரம் குளம் அருகே புளியமரத்தில் 05.09.1801 அன்று கோபால்நாயக்கர் தூக்கி லிடப்பட்டார். சாகும்போது கூட கொஞ்சமும் கலங்காமல் தன் மரணத்தைப் புன்னகையுடன் ஏற்றுக்கொண்ட மாவீரன் கோபால்நாயக்கர் ஆவார்.

நாட்டின் விடுதலைக் காக கடந்த 05.09.1801 ஆம் ஆண்டு உயிர் தியாகம் செய்த கோபால் நாயக்கர் அவர்களின் நினைவு தினம் (செப்டம்பர் 5ஆம் தேதி) அரசு விழாவாக கொண்டாடப்பட்டு வருகிறது.

அதன்படி, விருப்பாட்சியில், விடுதலைப் போராட்ட வீரர் கோபால் நாயக்கர் அவர்களின் நினைவு தினமான நேற்று(செப்டம்பர் 5) அன்னாரது திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து, மலர் தூவி மரியாதை செலுத்தப்பட்டது.

இந்திய திருநாட்டின் நலனுக்காக பாடுபட்ட தலைவர்கள் வழியில், நாமும் செயல்பட்டு, நாட்டின் நலனை காப்பாற்ற இந்நாளில் உறுதி எடுத்துக்கொள்வோம், என உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

திண்டுக்கல் மாவட்டம் மற்றும் பல்வேறு மாவட்ட பகுதிகளிலிருந்தும் ஏராளமான பொதுமக்கள், விடுதலைப் போராட்ட வீரர் கோபால் நாயக்கர் அவர்களின் மணிமண்டபத்திற்கு வருகைபுரிந்து, அன்னாரது திருவுருவச்சிலைக்கு மாலை அணிவித்து, மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

இந்நிகழ்ச்சியில், பழனி வருவாய் கோட்டாட்சியர் சரவணன், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் நாகராஜபூபதி, கோபால்நாயக்கர் சேவா சங்கம் தலைவர் செந்தில்குமார், செயலாளர் பெருமாள்சாமி, வாடிப்பட்டி ஊராட்சி மன்ற தலைவர் தஜோதீஸ்வரன், விருப்பாட்சி ஊராட்சி மன்ற தலைவர் மாலதி வெண்ணிலா மற்றும் ஏராளமான பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

எம்.கே.பி. அண்ணாதாசன் தலைமை! நொளம்பூர் வே.ராஜன் முன்னிலை பாலவாக்கம் மு.மனோகரன் பங்கேற்பு!

# மதுரவாயல் 91 வது வட்டக் கழக பொது உறுப்பினர்கள் கூட்டம்!

## டி.ஆர்.பாலு எம்.பி – அமைச்சர் மா.சுப்பிரமணியன்- காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ. சிறப்புரை!

சென்னை, செப்.6,

சென்னை தெற்கு மாவட்டம், மதுரவாயல் வடக்குப் பகுதி 91 வது வட்டக் கழக பொது உறுப்பினர்கள் கூட்டம் இன்று (6.9.2024வெள்ளிக்கிழமை) மாலை 5 மணிக்கு முகப்பேர் மேற்கு, சமுதாய நலக் கூடத்தில் நடைபெறுகின்றது.

கூட்டத்திற்கு வட்டச் செயலாளர் எம்.கே.பி. அண்ணாதாசன் தலைமை வகிக்கிறார். ஆ.மாலினி எம்.சி. அனைவரையும் வரவேற்றுப் பேசுகிறார். பகுதிச் செயலாளர் மண்டலக் குழுத் தலைவர் நொளம்பூர் வே.ராஜன் முன்னிலை வகிக்கிறார்.

இக் கூட்டத்தில் கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி.மாவட்டச் செயலாளர் அமைச்சர் மா. சுப்பிரமணியன் , காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ., மற்றும் மதுரவாயல் தொகுதி, வட்டப் பொது உறுப்பினர்கள் கூட்ட ஒருங்கிணைப்பாளர் பாலவாக்கம் மு.மனோகரன் ஆகியோர் சிறப்புரை யாற்றுகின்றனர்.

மேலும் இக் கூட்டத்தில் ஆர்.கர்ணல், எம்.ஏ.செந்தில் சுரேஷ், தீ.பாலாஜி, எம். உதய குமார், எம்.கே.ஞான சேகரன், ஆர்.ராக்கேஷ், ஆர்.ரசூல்தீன், டி.தாமோதரன், பி.ராஜேந்திரன், எம். செல்வகுமார், எஸ்.கெஜலட்சுமி, ஏ.அப்பாசாமி, எம்.கோபி, ஆர்.ஆனந்த ஜோதி, ஜெ.சௌரி செல்வ ரஜ், கோ.மணி,கே.கே. முனீஷ்வரன், கே.ச ண்முகம், பி.சுரேஷ், எஸ்.சண்முகம்,பி.முத்துக்குமார், என். வடிவேல், ஏ.கார்த்திக், அரசிலாமணி, பி.ராமானுஜம், மீசை என்.செல்வராஜ், கே. விவேக்குமார், எம்கே.அரிதாஸ், வழக்கறிஞர் விஷ்ணு, ஏ.வேலு, வசந்த், வாசுதேவன், மா.பழனி வேல், மின்னி ஜான், வி.செல்வக்குமார், ஆர்.அமுதாராமச்சந்திரன், டி.கன்னி யப்பன், எம். டில்லிராஜா, எஸ்.ஜானகி, ஜி . வ ச ந் தி , எம்.ஏ.மதிவாணண், தயாநிதி, பிரபு, எஸ்.ஹரிகிருஷ்ணன் மற்றும் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கி ன்றனர்.

அப்பு என்கிற பி.மணிவண்ணன், வி.யோகேஷ்வரன், எஸ்.மணிகண்டன், வி.கௌசிக் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

கா.சு.ஜெகதீசன் வரவேற்புரை!

# மீஞ்சூர் தெற்கு ஒன்றிய பொது உறுப்பினர்கள் கூட்டம்!

## டி.ஜெ.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ. சிறப்புரை!

திருவள்ளூர், செப்.6-

திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் மீஞ்சூர் தெற்கு ஒன்றியம் பொது உறுப்பினர்கள் கூட்டம் இன்று (06.09.2024 வெள்ளிக்கிழமை) மாலை 3.30 மணியளவில் பொன்னேரி வேண்பாக்கம் (பழைய கண்ணைய்ய நாயுடு மண்டபம்) ஸ்ரீ சீனிவாச திரு மண மண்டபத்தில் அவைத்த லைவர் வி.வி.பாண்டுரங்கன் தலைமையில் நடைபெறுகிறது.

மீஞ்சூர் தெற்கு ஒன்றிய செயலாளர் கா.சு.ஜெகதீசன் வரவேற்புரையாற்றுகிறார். ஒன்றிய நிர்வாகிகள் கா.சு.தன் சிங், பி.ஸ்டாலின், எம்.பார்த்தசாரதி, கஸ்தூரி மகேந்திரன், கே.எஸ்.குமார், ஏ.முனுசாமி, வி.சி.குணாளன், ஏ.வெற்றி (எ) ராஜேஷ், தேசராணி தேசப்பன், டி.ஜெ.டி.தினேஷ், மாநில ஆதிதிராவிட நலக்குழு தலைவர் க.சுந்தரம், மாநில சொத்து பாதுகாப்பு குழு துணைத்தலைவர் இ.ஏ.பி. சிவாஜி, மாநில ஆதிதிராவிட நலக்குழு செயலாளர் ஆ. கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ, மாவட்ட நிர்வாகிகள் மு.பகலவன், பி.ஜெ.மூர்த்தி, மு.கதிரவன், கே.வி.ஜி.உமாமகேஸ்வரி, எம்.எல்.ரவி, எஸ்.ரமேஷ், கே.சுப்பிரமணி, ஏ.வி.ராம மூர்த்தி, பா.செ.குணசேகர், பி.வெங்கடாஜலபதி, டாக்டர். பரிமளம் விஸ்வநாதன் முன்னிலை வகிக்கின்றனர்.

மாவட்ட செயலாளரும், கும்முடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினருமான டி.ஜெ. கோவிந்தராஜன் எம்.எல்.ஏ சிறப்புரையாற்றுகிறார்.

மாநில நிர்வாகிகள் சி.எச். சேகர், கே.ஜி.பாஸ்கர் சுந்தரம், வெ.அன்புவாணன், ஜி.ஸ்டாலின், ஏ.ஆர்.டி.உதய சூரியன், ஒன்றிய செயலாளர்கள் எம்.எஸ்.கே.ரமேஸ்ராஜ், பா.சுகுமாறன், நா. செல்வசேகரன், ஜி.ரவிக்குமார், க.சு. தமிழ் உதயன், பி.முத்து, அத்திபட்டு ஜி.ரவி, ராசத்திசெல்வ சேகரன், ருக்மணி மோகன் ராஜ், பி.ராஜேஷ்வரி, மு. மணிபாலன், டி.கே.சந்திரசேகர், ஆ.சத்தியவேலு, கி. வே.ஆனந்தகுமார், ந.பரிமளம், ஜான்(எ) பொன்னுசாமி, இரா.அறிவழகன், அபிராமிகுமரவேலு, சகிலா அறிவழகன், அப்துல் ரஷுத், கே.வி. லோகேஷ், டாக்டர். என். வில்சன் நிலவழகன், ரோஸ் பொன்னையன், பழவை அலவி, எம்.தினகரன், ஜி.பி. வெங்டேசன், ஏ.கே.சம்பத்குமார், இ.நிலவழகன், மீ.வி. கோதண்டன், தமிழ்செல்வி, பூமிநாதன், ஏ.கே.சுரேஷ், நா.மோகன்ராஜ், மீஞ்சூர் தெற்கு ஒன்றியத்திற்குட்பட்ட மாவட்ட அணிகளின் நிர்வாகிகள் எஸ்.ராஜேஷ், கே.ஹரி, எஸ். கே.பூபாலன், பி.ஜி.ரஜினிமுருகன், வி.வி.சேகர், ஆர்.யுவராஜ், கிளிக்கொடி பிரபு, சோம்பட்டு பழனி, டி.வி.எல்.லோகநாதன், சோம்பட்டு எழிலரசன், ஆர். ஜெய்குமார், கே.உமாகாத்தவராயன், ஆலாடு பி.அமுதா, டி. வெற்றிசெல்வி, அரசூர்.கோமளா, டி.தாரணி, மோகனபிரியா, கழக செயலாளர்கள், ஒன்றியப் பிரதிநிதிகள், கிளைக்கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள் பங்கேற்கின்றனர்.

எஸ்.தேவராஜ் நன்றியுரை யாற்றுகிறார்.

அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆலோசனை வழங்குகிறார்!

# வில்லிவாக்கம் மேற்கு 95 - 95 (அ) - 94 வது வட்டக் கழகங்கள் பொது உறுப்பினர்கள் கூட்டம்!

## அ.வெற்றிஅழகன் - வே.கௌதமன் - கூ.பீ.ஜெயின் பங்கேற்பு! சிட்கோ சேகர் - மா.அகிலன் - பா.ஜானி தலைமை!

சென்னை, செப். 6 -

வில்லிவாக்கம் மேற்குப் பகுதிக் கழகச் செயலாளர் கூ.பீ.ஜெயின் எம்.சி. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

சென்னை கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் பி.கே. சேகர்பாபு ஆலோசனைப் படி, வில்லிவாக்கம் மேற்குப் பகுதி, 95, 95 (அ) மற்றும் 94 ஆகிய வட்டக் கழகப் பொது உறுப்பினர்கள் கூட்டங்கள் இன்று (06.09.2024 வெள்ளிக்கிழமை) நடைபெறுகிறது.

95 வது வட்டக் கழகப் பொது உறுப்பினர்கள் கூட்டம், மாலை 6 மணியளவிலும்,

95 (அ) வட்டக் கழகப் பொது உறுப்பினர்கள் கூட்டம், மாலை 7 மணியளவில்,

94 வது வட்டக் கழகப் பொது உறுப்பினர்கள் கூட்டம், மாலை 8 மணியளவிலும், 94 வது வார்டு மாமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் நடைபெறுகிறது.

இக்கூட்டங்களுக்கு வில்லிவாக்கம் சட்டமன்ற உறுப்பினர் அ.வெற்றி அழகன், வில்லிவாக்கம் தொகுதிப் பார்வையாளர் வே.கௌதமன், பகுதிக் கழகச் செயலாளர் கூ.பீ. ஜெயின் எம்.சி. ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

வட்டக் கழகச் செயலாளர்கள் சிட்கோ சேகர், மா.அகிலன், பா.ஜானி ஆகியோர் தலைமை வகிக்கின்றனர்.

ஆகவே 95, 95 (அ) மற்றும் 94 ஆகிய வட்டங்களுக்குட்பட்ட வட்டக் கழக நிர்வாகிகள், BLA2, மாவட்டப் பிரதிநிதிகள், கழக மூத்த முன்னோடிகள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், பொது உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு பகுதிக் கழகச் செயலாளர், மண்டலக் குழுத் தலைவர் கூ.பீ. ஜெயின் கேட்டுக் கொண்டுள்ளார்.



சென்னை வடக்கு மாவட்டம் ஆர்.கே.நகர் கிழக்கு பகுதி 39வது வட்ட திமுக சார்பில் பொது உறுப்பினர்கள் கூட்டம் நடைபெற்றது.இதில் வட்ட செயலாளர் என்.எம்.கதிரேசன் தலைமை வகித்தார்.பகுதி செயலாளர் இரா. லட்சுமணன் முன்னிலை வகித்தார்.மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ, ஜே.ஜே.எபினேசர் எம்.எல்.ஏ, ஆகியோர் சிறப்புரையாற்றினர்.உடன் என்.அனிபா, ஆர்.டி.ராஜா, கே.பாலு, எம்.வேதலட்சுமி, கே.பி. சதிஷ்குமார், கே.தேவிகதிரேசன் எம்.சி, பி.அன்பழகன், எஸ்.எம்.டி.ரவிச்சந்திரன், ஜெ.ஜெகன், டி.கணேசன், ஆர்.மூர்த்தி, எஸ்.கவியரசு கே.சதிஷ்குமார், காஞ்சனா, ஜி.மணிகண்டன், பி.ஜெயபால், கா.ப.சாமி, எம். ஜெயசந்திரன், எம்.குருமூர்த்தி, சலாவுதின், கே.ஆசைத்தம்பி, இ.பிரேம்குமார், ஜி.மைக்கேல், கே. சதிஷ்குமார், கே.ஜி.சங்கரன், ஆர்.ராதிகா, பி.காஞ்சனா பஞ்சாட்ராம், எம்.முருகேசன், கே.எஸ்.குருநாதன், ஆர்.சம்பத், எஸ்.கவியரசு, எம்.தயாளன், ஏ்.ரீகாந்த், மற்றும் பலர் கலந்து கொண்டனர்.ஜெ.கௌஸ்பாஷா, டி.எல்.பி.என்.ரவி, ஆகியோர் நன்றி கூறினர்.

சென்னை மேற்கு மாவட்டம் ஆயிரம் விளக்கு கிழக்கு பகுதி

# 113(அ ) வட்ட கழக நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம்!

## வட்டச் செயலாளர் த.தேவராஜ் அறிவிப்பு!

சென்னை, செப்.6-

வட்ட கழக செயலாளர் த.தேவராஜ் அறிக்கை வருமாறு:-

இன்று (06.09.2024) வெள்ளிக்கிழமை மாலை 05.00 மணியளவில் தர்மாபுரம் மெயின் ரோட்டில் உள்ள வட்ட கழக கிளை அலுவலகத்தில் நடைபெற உள்ள கழகத்தின் 75-வது ஆண்டு முப்பெரும் பவள விழா, வாக்காளர்கள் சரிபார்ப்பு மற்றும் கழக ஆக்கப்பணிகள் தொடர்பான ஆலோசனை கூட்டம் 113(அ) வட்ட கழக அவை தலைவர் ப.குமரேசன் தலைமையில், 113(அ) வட்ட கழக செயலாளர் த.தேவராஜ் முன்னிலையில் நடைபெற உள்ளது.

இவ்வாலோசனை கூட்டத்தில் மேற்கு மாவட்ட கழக செயலாளர் நே.சிற்றரசு எம்.சி., ஆயிரம் விளக்கு சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் நா.எழிலன், ஆயிரம் விளக்கு பகுதி கழக செயலாளர் மா.பா.அன்புதுரை, பகுதி துணை செயலாளர் மு.வெங்கடேசன் ஆகியோர் கலந்து கொண்டு ஆலோசனை வழங்கி சிறப்புரையாற்றுகின்றனர்.

ஆகையால் வட்ட கழக நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

முன்னாள் வட்டப் பிரதிநிதி

# ஏ.ஒய்.கிளமெண்ட் படத்திறப்பு!

## நே.சிற்றரசு – தயாநிதிமாறன் பங்கேற்பு!

சென்னை, செப். 6 -

சென்னை மேற்கு மாவட்டம், ஆயிரம்விளக்கு கிழக்கு பகுதி, மறைந்த மாமன்ற உறுப்பினர் எம்.ஏ. ஜேசுதாஸ், 6வது கமிட்டி சேர்மன் அவர்களின் மகன் 111 வது வட்டத்தைச் சார்ந்த மாவட்டப் பிரதிநிதி கி.ஜான், டிசில்வா ஆகியோரது தந்தையும் முன்னாள் வட்டப் பிரதிநிதி ஏ. ஒய்.கிளமென்ட் படத்திறப்பு நிகழ்ச்சி இன்று (6.9.2024 - வெள்ளிக்கழமை) காலை 11 மணியளவில் எண். 4.6. பேகம் சாகிப் தெரு, மூன்றாவது சந்து, மக்கீஸ் கார்டன், ஆயிரம்விளக்கு, சென்னை 600 006 முகவரியில் நடைபெறுகிறது.

மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு, அன்னாரது படத்தினை திறந்து வைக்கிறார்.

இந்நிகழ்ச்சியில் தயாநிதி மாறன், எம்.பி., கழக இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை, நா.எழிலன் எம்.எல்.ஏ., பகுதிச் செயலாளர்கள் மா.பா. அன்பு துரை, வினோத் வேலாயுதம் , டாக்டர் கலை கதிரவன், துபாய் வி.ஆர். விஜய், எஃப். பீட்டர் ஜான் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், முன்னணியினர் பங்கேற்கின்றனர்.


**பெருநகர சென்னை மாநகராட்சி**
**பொது சுகாதாரம் / பூச்சி தடுப்பு துறை**

பொ.சு.பூ.த.து.ந.க.எண்.எம்7/291–1/2024

**குறுகிய கால மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு**

பொது சுகாதாரம், பூச்சி தடுப்பு துறையில் குறுகிய கால மின்னணு ஒப்பந்தப்புள்ளி மாநகர நல அலுவலர் அவர்களால் வரவேற்கப்படுகின்றது.

**பணியின் பெயர்:** வாசனையுடன் கூடிய பூச்சி விரட்டி மருந்தான Lemon Grass Oil - 1500 கிலோ கொள்முதல் செய்யும் பணி

**பணியின் மதிப்பு: ரூ.41,57,730/–, ஒப்ப முன்வைப்பு தொகை: ரூ .41,577/–**

**http://tntenders.gov.in** என்ற இணையதளத்தின் மூலம் மேற்கண்ட ஒப்பத்தில் **12.09.2024** அன்று பிற்பகல் **3.00 மணி** வரை பங்கேற்கலாம். ஒப்ப திறப்பு நாள்: **13.09.2024 பிற்பகல் 3.30** மணியளவில். மேலும் விவரங்களுக்கு ஒப்ப ஆவணத்தில் தெரிந்துகொள்ளவும்.

செ.ம.தொ.இ / 3548 / ஒப்பந்தப்புள்ளி / 2024

**மாநகர நல அலுவலர்**




தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய தலைவர் பூச்சி எஸ்.முருகன் தனது மனைவியும் வழக்கறிஞருமான திருமதி. மீனாட்சியுடன் சென்று இராமநாதபுரம் கீழக்கரை, பி.எஸ்.எம். பேலசில் நடைபெற்ற அவரது உதவியாளர் கா.வினோத் இல்லத் திருமண விழாவில் கலந்துகொண்டு மணமக்கள் எம். கீர்த்திகா – எம். சௌந்தர்யன் தம்பதியை வாழ்த்தினார். மதுரை மாநகராட்சி மண்டலக்குழுத் தலைவர் சுதன், ராமநாதபுரம் அரசு வழக்கறிஞர் கார்த்திக் உள்ளிட்டோர் உடன் கலந்துகொண்டு வாழ்த்தினார்கள்.